இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியத்தின்

# வளரும் செடி

ஆண்டு சந்தா ரூ.25 தனிப்பிரதி ரூ.3

மலர் 17 ஏப்ரல்–2026 மணம் 13



## இயேசு தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்...

ஆசிரியர் : சகோ. ஜான் M. ஜெயராஜ்

# இதயந்திறந்து

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறது என்ன? என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதமும் தேவன் நமக்குத் தருகின்ற புதுப்புது மன்னாவுக்காகத் தேவனைத் துதிப்போம். இந்த உயிர்த்தெழுந்த பண்டிகை நாட்களுக்காக மேலும் கர்த்தரைத் துதிப்போம். அவர் உயிர்ப்பிக்கவில்லையென்றால், நமது விசுவாச ஜீவியமும் பலனற்றதாக, பிரயோஜனமில்லாததாக மாறிவிடும்.

உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமையின் ஆசீர்வாதங்களையே இந்த மலரில் காண்கிறோம். அவரது சிலுவையின் மேன்மையையும், மகிமையையும் பெற்று மகிழ்வோமாக.

உங்களுக்காகவும், குடும்பம், தொழிலுக்காகவும் ஜெபிக்கிறோம். ஜெபித்து ஜெயம் பெறுவோம். உங்கள் இதயத்தின் தேவையையும், மன விருப்பத்தையும் அறிந்தவர், அவைகளை நிறைவேற்றித் தருவாராக! கர்த்தர் ஒருவரே காரியங்களை வாய்க்கப் பண்ணுகிறவரானதால், மனுஷரிடம் பேசுவதைக் குறையுங்கள். தேவனிடம் பேசுங்கள். ஆகவே உங்களுக்கு பெலனும் ஆசீர்வாதமுமாயிருக்கும்.

இந்த மாத இறுதியில் நடக்க இருக்கின்ற 40 ஆவது கன்வென்ஷனுக்காக ஜெபியுங்கள். ஆத்தும அறுவடைக்காகவும், ஜனங்கள் கூட்டிச் சேர்க்கப்படவும், கர்த்தர் ஊழியர்களைப் பயன்படுத்தவும் ஜெபியுங்கள். ஜனங்களுக்குள்ளே மனந்திரும்புதல், மெய்யான மனமாற்றம் உண்டாக ஜெபிப்போம். முடிந்தவர்கள் பங்கு கொள்ளுங்கள். நாம் இணைந்து ஜெபிக்கும்போது, கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

தேவ கிருபை நம்மில் பெருகுவதாக!

ஜெபத்துடனும் அன்புடனும்

**சகோ. ஜான் M. ஜெயராஜ்**

இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியங்களின்

மாவடியில்

**நற்செய்திப் பெருவிழா**

( 40 ஆவது கன்வென்ஷன் )

நற்செய்தியாளர்கள்:

**Pr. அற்புதராஜ் சாமுவேல்** (சென்னை)

**Pr. ஆமோஸ்** (திண்டுக்கல்)

**Pr. பென்ஸ்** (கோவை)

2026 ஏப்ரல் 23, 24, 25, 26 (வியாழன்–ஞாயிறு)

தினமும் மாலை 6:30 மணி

வெள்ளி, சனி, ஞாயிறு பகல் கூட்டங்கள் உண்டு.

ஏப்ரல் 25 சனிக்கிழமை காலை 10:00 மணிக்கு

**பெண்கள் சிறப்பு முகாம்**

நற்செய்தி: சகோதரி. **ஜீவா விஜயகுமார்** (VMM விருதுநகர்)

**மன்னா:**

# இயேசு தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்...

**தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்... (மத். 28:5,6)**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாக்காலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த வருடத்திலும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் பண்டிகை நாளை நாம் ஆசரிக்கும்படி கர்த்தர் கொடுத்த கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம். வெறுமனே பண்டிகையை மட்டும் ஆசரிக்கிறவர்களாக இல்லாதபடி, உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக, அதை அனுபவிப்பவர்களாக இருந்தால், அதுவே வெற்றியான பண்டிகையாக இருக்கும்.

கடந்த மாதத்தில், “கொம்பைப் பயன்படுத்துங்கள்” என்று, சிலுவை தியானத்தைக் குறித்து சிந்திக்க தேவன் உதவி செய்தார். உங்களுக்கும் பயனுள்ளதாக இருந்திருக்குமென்று விசுவாசிக்கிறேன். நீங்கள் கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்தி, உங்கள் வாழ்க்கையில் விடுதலையை நன்மையை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

இந்த மாதத்திலும், “இயேசு தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்.” எனும் தலைப்பீன் கீழாக ஈஸ்டர் பண்டிகை செய்தியைத் தியானிக்கப் போகின்றோம். உயிர்த்தெழுந்த இயேசு என்ன செய்தார்? என்பதையும், இப்போது என்ன செய்கிறார்? என்பதையும் சிந்திக்கப் போகிறோம். “தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்” என்று தூதன் சொல்வதைப் பார்க்கிறோம். வசனத்தைக் கவனியுங்கள்.

**இயேசு எருசலேமுக்குப் போகும்போது, வழியிலே பன்னிரெண்டு சீஷரையும் தனியே அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும், வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப் படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரை பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார். (மத். 20:17–19)**

அன்புநேசப்பிள்ளைளே! தேவ தூதன் அந்த ஸ்திரீகளிடத்தில், நீங்கள் சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷருக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள் என்றான். ஸ்திரீகள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு, “பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்.”

தே. இ. பேசுவாரா!: வாக்குத்தத்தங்கள் – கையிலுள்ள பணம்; (எசே. 3:3)

அவர்தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு, திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மை பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்து கொள்வார்.

உயிர்த்தெழுந்த இயேசு தம்முடையவர்களுக்குத் தரிசனமானார். அவர் யார் யாருக்கு தரிசனமானார் என்பதைத் தொடர்ந்து சிந்திப்போம். அன்று மாத்திரமல்ல இன்றும் தரிசனமாகிறார், தம்மை வெளிப்படுத்துகிறார். ஜெபத்துடன் தொடருங்கள். கர்த்தர் இயேசு நம்முடன் பேசுவாராக!

## 1. மகதலேனா மரியாளுக்குத் தரிசனமானார். (தனித்த தரிசனம்)

**வாரத்தின் முதலாம் நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்துக்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள். உடனே அவள் ஓடி வந்து, பேதுருவினிடத்திலும், யோவானிடத்திலும்போய்: கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரிவில்லை. (யோவான் 20:1,2)**

பேதுருவும், யோவானும் கல்லறையினிடத்துக்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள். கல்லறைக்குள் பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், சரீரம் இல்லாததையும் கண்டார்கள். இயேசு மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்கிற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள். பின்பு அந்த சீஷர்கள் தங்களுடைய இடத்திற்கு திருப்பிப் போனார்கள்.

மகதலேனா மரியாளோ திரும்பிப் போகாமல், கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள். அவள் கல்லறைக்குள் குனிந்து பார்த்தபோது, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்திருந்த இரண்டு தூதர்களைக் கண்டாள். அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய்? என்றார். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள்.

மரியாள் இவைகளைச் சொல்லி பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து; ஸ்திரீயே, ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்? என்றார். அவள் அவரைத் தோட்டக்காரரென்று எண்ணி ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும் நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுகிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள். அதற்கு போதகரே என்றும் அர்த்தமாம்.

அன்பு நேசப்பிள்ளைகளே! இயேசு உயிர்த்தெழுந்த பின்பு மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார். சீஷர்கள் கல்லறையிலிருந்து திரும்பிப்போனபோதிலும், மரியாள் திரும்பிப் போகாமல் தனித்து தரித்து நின்றாள். அதினிமித்தம் இயேசுவைத் தரிசித்தாள். தேவ சமூகத்தில் தனித்து, தரித்து நிற்பதில் விஷேசம் இருக்கிறது. கவனியுங்கள்.

**1. ஆதி. 18:8 – ஆபிரகாம் அவர்கள் அருகே மரத்தடியில் நின்று கொண்டிருந்தான்.**
**(ஆதி. 15:5; 17:19) – வாக்குத்தத்தம் நிறைவேறியது.**

**2. ஆதி. 32:24 – யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்.**
**(இஸ்ரவேலாக மாற்றப்பட்டான்... அங்கே அவனை ஆசீர்வதித்தார். (32:29)**

**3. ரூத் 1:14 – ரூத் மாமியை விடாமல் பற்றிக் கொண்டாள். (4:13 – ரூத் போவாசுக்கு மனைவியானாள்)**

எனக்கன்பானவர்களே! இது தனித்த தரிசனம். உங்கள் தனிப்பட்ட வாழ்வைக் குறித்து, ஊழியம், தொழில் குறித்து தரிசனம் என்ன? கர்த்தர் பவுலிடன் சொல்வதைக் கவனியுங்கள்.

> **நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். (அப். 26: 15,16)**

நான் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டபோது, எனது வேலையை ராஜினாமா செய்துவிட்டேன். உள்ளூரில் ஊழியம் செய்ய எனக்கு விருப்பமில்லை. காரணம் “உள்ளூர் மேளம் எடுபடாது” என்பது முதுமொழி. வெளியூர் செல்ல நான் ஜெபித்தேன், பிரயாசப்பட்டேன். ஆனால் கர்த்தரோ அதற்கான வழியைத் திறக்கவில்லை. இன்று ஒன்பது கிராமத்தில் ஊழியம் நடக்கிறது. ஏழு இடங்களில் சபையைக் கட்டி தந்திருக்கிறார். எட்டாவது இடத்தில் சபைக்கான அஸ்திபாரம் போடப்பட்டிருக்கிறது. ஒன்பதாவது இடத்தில் வாடகை வீட்டில் ஊழியம் நடக்கிறது. இனி வெளியே செல்வதற்கு வாய்ப்பே இல்லை. ஊழியம் சிறப்பாக நடக்கிறது. அந்த பரம தரிசனத்திற்கு நான் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.

## 2. சீஷரில் இருவருக்கு தரிசனமானார் (குடும்ப தரிசனம்)

> **சீஷரில் இரண்டு பேர் ஒரு கிராமத்துக்கு நடந்து போகிறபொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார். அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; அவர்களையும் அவர்கள் நம்பவில்லை... (மாற். 16:12,13)**

இயேசு உயிர்த்தெழுந்த அன்றைய தினமே சீஷரில் இரண்டு பேர் எருசலேமிலிருந்து எம்மாவு எனும் கிராமத்திற்குப் போனார்கள். போகையில் எருசலேமில் நடந்த யாவையுங் குறித்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு போனார்கள். இயேசுதாமே அவர்களுடனே கூட நடந்து போனார். ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது.

இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் துக்கமுகமுள்ளவராய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார். அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா அவரை நோக்கி இந்நாட்களில் எருசலேமில் நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான். இவ்விதமாக சம்பாஷித்துக் கொண்டு போனார்கள். அவர்கள் தாங்கள் போகிற கிராமத்திற்குச் சமீபமானார்கள். அப்பொழுது இயேசு அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார்.

அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று என்று அவரை வருந்திக்கேட்டுக் கொண்டார்கள். அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார். அவர்களோட அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்கே கொடுத்தார். அப்பொழுது அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்து போனார். அந்நேரமே அவர்கள் எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். மற்ற சீஷர்களிடத்தில் வந்து, இயேசுவைக் கண்டதையும், வழியில் நடந்தவைகளையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னார்கள்.

அன்பு நேசப்பிள்ளைகளே! இயேசு உயிர்த்தெழுந்த அந்த நாளில்தானே எருசலேமிலிருந்து எம்மாவு கிராமத்திற்குப் போன இரண்டு சீஷர்களுக்குத் தரிசனமானார். இருவர் என்பதினாலே குடும்ப தரிசனம். உங்கள் குடும்பத்தைக் குறித்த தேவ தரிசனம் என்ன? தீர்க்கமான தரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்.

சீஷர்கள் நடந்து போகையில் இயேசு தாமே அவர்களுடன் இணைந்து நடந்து போனார். இயேசு உங்கள் குடும்பத்துடன் இணைந்திருக்கிறாரா? பிதாவுக்குப் பிரியமானவைகளைக் நான் எப்பொழுதும் செய்கிறபடியால்தான் அவர் என்னை தனியேயிருக்க விடவில்லை. (யோ.8:29) இயேசுவுடன் இணைந்த குடும்ப வாழ்வு ஆசீர்வாதமானதாகவும், சாமாதானம் நிறைந்ததாகவும் இருக்கும்.

இயேசு அவர்களை நோக்கி, நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார். அதாவது அவர்களுடைய துக்கங்கள் விசாரிக்கப்படுகிறது. இயேசு நமது குடும்பத்தில் இணையும் போது, நமது காரியங்களும், தேவைகளும், எதிர்பார்ப்புகளும், துக்கங்களும், வியாதிநிலைகளும் விசாரிக்கப்படுகிறது. அவர் தாமாகவே முன்வந்து விசாரிக்கிறார். மட்டுமல்ல.

மோசே முதலில் சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லா வற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்க காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டார்கள். குடும்பத்தில் சகல காரியங்களிலும் கர்த்தரே நமக்குப் பரிகாரியாகவும், போதுமானவராகவும் இருந்து நடத்துகிறார். மகிமை இயேசுவுக்கே...

## 3. சபை தரிசனம்:

**பதினொருவரும் போஜனப்பந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற் போனதினிமித்தம், அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதய கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார்.**

**(மாற். 16:14)**

சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் இயேசு வந்து நடுவே நின்று: “உங்களுக்குச் சமாதானம்” என்றார். மகதலேனா மரியாள், தான் இயேசுவைக் கண்டதையும், எம்மாவு

எனும் கிராமத்திற்குப் போன சீஷர்கள் அவரைக் கண்டதையும் அவர்களுக்கு அறிவித்தார்கள். ஆனால் சீஷர்களோ அதை நம்பவில்லை. இதினிமித்தம் இயேசு சீஷர்களைக் கடிந்து கொண்டார். அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும், விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

வேத வாக்கியங்கள் அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும், பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது நீங்கள் இவைகளுக்குச் சாட்சியாயிருக்கிறீர்கள்.

என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

அன்பு நேசப்பிள்ளைகளே! உயிர்த்தெழுந்த இயேசு அந்த நாளில் தானே முதலாவது மகதலேனா மரியாளுக்கும் பின்பு இரண்டு சீஷருக்கும் மூன்றாவதாக சீஷர்களுக்கும் தரிசனமானார். சீஷர்கள் விசுவாசிகளின் கூட்டமாகையால் இது சபை தரிசனம். நம்முடைய சபை தரிசனம் பெற்றதாக இருக்க வேண்டும்.

இயேசுவே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்து முதற்பேறுமானவர் சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்தில் உள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவரையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

இயேசு அவர்கள் மேல் ஊதி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்.

தரிசனம் பெற்ற சபையிலே, வசனத்தின் வெளிச்சமும், மறைவான மன்னாவும் வெளிப்படும். வியாதியஸ்தர், கைவிடப்பட்டவர்கள், அசுத்த ஆவியின் பிடியிருலிக்கிறவர்களுக்கு விடுதலை உண்டாகும். ஜனங்களைக் கர்த்தர் அழைத்துவந்து அவர்களை ஆசீர்வதிப்பார்.

## 4. அழைப்பைவிட்டவர்களுக்குத் தரிசனம்

**இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார். இயேசு மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு தம்முடைய சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார். இயேசு மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்... (யோ. 21:1,14)**

சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப் போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள்

உடனே புறப்பட்டுப் போய், படவேறினார்கள். அந்த ராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள்.

என் பின்னே வாருங்கள். உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்று கர்த்தர் மீன் பிடிக்கிறவர்களை மாற்றினார்; இயேசு மரித்த பின்பு அவர்கள் மீண்டும் தங்கள் தொழிலுக்கு நேராகத் திரும்பினார்கள். காரணம் அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்கிற வேத வாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள். அதினிமித்தம் அவர்கள் மீண்டும் மீன்பிடிக்கப் போய்விட்டார்கள். அவர்கள் பின்வாங்கிப் போவதை இயேசு அறிந்ததினால் அவர்களைத் தேடி வந்தார்.

அன்பு நேசப்பிள்ளைகளே, இந்த சீஷர்கள் அனைவரும் மீன்பிடிக்கும் தொழிலில் உள்ளவர்கள். கடலைக் குறித்தும், எந்த நாட்களில் என்ன மீன் கிடைக்கும் என்பதையும் நன்கு அறிந்திருந்தார்கள். ஆனாலும் இன்று வெறுமையாக வருகிறார்கள். காரணம் அதைச் செய்கிறவர் தம்முடையவர்கள், தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தம்மை விட்டுத் திரும்பிப் போவதை அவர் விரும்புகிறதில்லை. ஆகையால் அவரை அவர்களைத் தேடி வந்திருக்கிறார். அந்த ராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை என்பதை விட, கர்த்தர் கிடைக்கப்பண்ணவில்லை என்பதுதான் உண்மை. அவர்களை வெறுமையாக வரப்பண்ணினதால், அவர்களுக்காக அப்பத்தையும் பொரித்த மீனையும் ஆயத்தப்படுத்தியிருந்தார்.

எனக்கன்பானவர்களே! நகோமியின் மூத்த மருமகளாகிய ரூத்தின் வாழ்க்கையைத் கவனியுங்கள். இயேசுவின் வம்ச வரலாற்றில் அவள் பெயர் இடம் பெற்றிருக்கிறது. கர்த்தரே அந்த அற்புதமான செயலை அனுமதித்திருந்தார். இதில் கர்த்தர் செய்த இரண்டு காரியங்களைக் கவனியுங்கள்.

**1. ரூத் 1:5 – புருஷனாகிய மக்லோன் இறந்து போனான்.**

**2. ரூத் 1:4 – ஏறக்குறைய பத்துவருஷம் வாசம் பண்ணினார்கள்.**
**(குழந்தை பாக்கியம் இல்லை)**

இந்த இரண்டு காரியங்களில், ஒன்று இருந்திருந்தாலோ (புருஷன், பிள்ளை) ரூத் மாமியுடன் திரும்புவது கடினம். உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்கிறாள். என் தாய், தகப்னை இழந்தாலும் இழப்பேனே ஒழிய, தேவனை நான் இழக்க மாட்டேன் என்பதில் மிகமிக உறுதியாக இருந்தாள். கர்த்தரைக் கனம் பண்ணின அவளைக் கர்த்தர் கனம் பண்ணினார்.

அன்பு நேசப்பிள்ளைகளே! அழைப்பை விட்டு, பின்வாங்கின சீஷர்களை அவரே தேடி வந்ததினால், அதற்குப் பின்பு அவர்கள் கர்த்தருக்குள் வைராக்கியமாக நின்றார்கள்.

உயிர்த்தெழுந்த இயேசு தனி நபருக்கும், குடும்பத்திற்கும் சபைக்கும் பின்மாற்றக்காரருக்கும் தம்மைப் வெளிப்படுத்துகிறார். அவரவர் திரும்பி, திருந்தி வாழ்வதையே கர்த்தர் விரும்புகிறார். நாமும் ஜாக்கிரதையாய் ஓடுவோம். உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமையைத் தரித்துக்கொண்டு சாட்சியாக ஜீவிப்போம். ஆமென்! அல்லேலூயா!!

**காணத்தவறாதீர்கள்!**

## TCCL - TV சேனலில் நமது நிகழ்ச்சிகள்

| | TCCL NO: | தொலைக்காட்சி | கிழமைகள் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | 170 | ஜீவன் காஸ்பல் TV | சனி | இரவு 9:30 – 9:45 |
| | | | ஞாயிறு | மதியம் 2:02 – 2:20 |
| 2 | 177 | மகிமை TV | செவ்வாய் | இரவு 8:30 – 8:45 |
| | | | சனி | இரவு 8:30 – 8:45 |
| 3 | 600 | நம்பிக்கை TV | சனி | காலை 6:45 – 7:00 |
| 4 | 730 | ஜெயம் TV | ஞாயிறு | இரவு 8:30 – 8:45 |
| 5 | 737 | அதிசயம் TV (Adhisayam TV) | வியாழன் | இரவு 9:30 – 9:45 |
| | | | சனி | காலை 8:30 – 8:45 |
| 6 | | JTK TV- யில் | திங்கள் | காலை 6:45 – 7:00 |
| 7. | கன்னியாகுமாரி மாவட்டத்தில் **வசனம்** TV- யில் தினமும் இரவு 7:30 | | | |

## ஜெப சேனை ஜெபக் குறிப்புகள் [ஏப்ரல் 2026]



1. மத்திய, மாநில அரசுகளின் ஐக்கியமான செயல்பாடுகளுக்காக...
2. இராணுவத்துறை, காவல்துறை அதிகாரிகள், பணியாளர்களுக்காக...
3. தேசத்தில், உலகத்தில் சமாதானம் நிலவும்படியாக...
4. அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் யுத்தத்தில் அமைதல் உண்டாகிட...
5. தற்கொலைகள், பாலியல் வன்கொடுமைகள் நீங்கிட...
6. பொருளாதார வீழ்ச்சி, விலைவாசி ஏற்றத்திற்காக...
7. மொபைலை தவறாகப் பயன்படுத்தி, நஷ்டமடைபவர்களுக்காக...
8. வாகன ஓட்டிகள், சாலை விபத்துக்களுக்காக...
9. நமது இயேசு ஜீவிக்கிறார் ஊழியம், ஊழியர்கள், விசுவாசிகளுக்காக...
10. நமது ஜெப சேனை, TV நிகழ்ச்சிகள், பத்திரிக்கை, புத்தக ஊழியங்களுக்காக...



## நடப்புச் செய்திகள்



1. தேர்தல் பணிகளில் கட்சிகள் தீவிரம்.
2. கடன் பாரத்தினால் ஓரே குடும்பத்தினர் 4 பேர் காரில் தீயிட்டு தற்கொலை.
3. ஏப்ரல் 23-ல் தமிழ்நாட்டில் தேர்தல்.
4. எரிபொருள் தட்டுபாடு அபாயம்.
5. ரயில்வே துறையில் புதிய வழித்தடங்கள்.
6. மதுரை விமான நிலையம் உலகத்தரம் வாய்ந்ததாக அறிவிப்பு.

ஜெபத்தில் தாய் பாஷை. (உன். 2:14)

# தேவன் இப்படியும் பேசுவாரா!

## 1. உன்னை மறந்தவர்களை நினைத்து வருந்தாமல், உன்னை நினைப்பவர்களை நினைத்து வாழ்ந்திடு...

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! எத்தனையோ நன்மை பெற்றவர்கள் மறந்துவிட்டார்களே என்று வருந்தி ஜெபித்தார்கள். அதற்கு நேசர், “என்பிள்ளையே! உன்னை மறந்தவர்களை நினைத்து உன்னை நீயே காயப்படுத்துவதைவிட, ஏன் அதை விட்டுவிட்டு, உன்னை விரும்புகிற, நினைக்கிறவர்களை நினைக்க கூடாது. நினைத்துபார். உன் வாழ்க்கை மகிழ்ச்சியானதாக மாறும்.” என்றார்.

**தூசியை உதறிவிட்டு எழுந்திரு...(ஏசா. 52:2)**

## 2. உன் நகையை கோபத்தால் இழந்துவிடாதே!:-

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! கோபப்படாமல் வாழ முடியாமா? என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், “என்பிள்ளையே! ஒரு காரியத்தை புரிய வைப்பதற்கு நான் ஒவ்வொருவருக்கும் இயற்கையாகவே புன்னகையை ஆபரணமாகத் கொடுத்திருக்கிறேன். அதைக் கெடுக்கக் கூடிய சுபாவம் கோபமாகும். கோபத்தினால் உன் முகத்தை அலங்கோலமாக்கி விடாதே” என்றார்.

**கோபத்தினால் உம்மைத்தானே பீறுகிற உமதுநிமித்தம்... (யோபு 17:3)**

## 3. நிறைவைப் பேசு, நிறையப் பேசாதே:-

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! உன் வார்த்தைகள் சுருக்கமாய் இருப்பதாக என்பது சரியா? என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், “என்பிள்ளையே! ஒரு காரியத்தை புரியவைப்பதற்கு நிறைய (அதிகம்) பேசாமல், அதினுடைய நிறைவாய் (பூரணம்) பற்றி பேசு. சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது” என்றார்.

**பக்தி விருத்திக்கேதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜன முண்டாகும்படி பேசுங்கள்... (எபே.4:29)**

# தூண்டில்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! விடைகளை வெள்ளைத் தாளில் எழுதி, வருகிற 20ஆம் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படியாக அனுப்புங்கள்.

கடைசி இரண்டு கேள்விகளும் யோபு – சங்கீதம் புஸ்தகங்களுக்கிடையே உள்ளது.

**ஏப்ரல் 2026** **தூண்டில் போடுங்கள், வலை (Internet) விரிக்காதீர்கள்.**

1. நீ உன் மட்டிலிரு – என்றது யார்?
2. நான் உனக்கு என்ன செய்வேன் – என்றது யார்?
3. வருந்தி விண்ணப்பம் செய்தான் – யார்?
4. எதை திரும்பக் கொடுக்கவேண்டியதாகும் – என்றது யார்?
5. நீ என்னிடத்தில் திரும்பி வா – என்றது யார்?
6. எவைகளை எடுப்பிக்கும் நாள் வருகிறது?
7. எதைச் சுற்றித்திரிந்தது போதும்?
8. தேவனிடத்தில் சேர விரும்புகிறார்கள் – யார்?
9. எதை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்?
10. நீ ஓட வேண்டியது என்ன – என்றது யார்?
11. அவர்கள் புறப்பட்டபோது மகிழ்ந்தார்கள் – யார் அவர்கள்?
12. எதைப்போலக் கடந்து போகிறார்கள்?

## 2026 பிப்ரவரி மாத மீன்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. ஏசா 17:8 | – மனுஷன் | 7. 2இரா. 1:5 | – அகசியா |
| 2. லூக். 1:25 | – எலிசபெத்து | 8. யோபு 21:19 | – அக்கிரமத்தை |
| 3. புல. 5:8 | – அடிமைகள் | 9. ஏசா. 16:14 | – கர்த்தர் |
| 4. எசே. 16:59 | – கர்த்தர் | 10. எசே. 16:63 | – உன் வாயை |
| 5. உபா.5:29 | – இருதயம் | 11. 2நாளா. 25:19 | – யோவாஸ் |
| 6. மீகா. 3:11 | – தீங்கு | 12. நெகே. 4:10 | – சுமைக்காரரின் |

## 2026 பிப்ரவரி மாதம் மீன் பிடித்தவர்கள்

01. Mrs.D. ஜெபக்குட்டி மோசஸ் – மருதகுளம்.
02. Mrs. ஜான்சி சந்தியா – மருதகுளம்.
03. Mrs. ஹெலன் சுவிட் – டோனாவூர்.
04. Mrs. ஷெர்லி சாம் – அரக்கோணம்.
05. Mrs. சுசிலா ஜெயக்குமார் – அரக்கோணம்.
06. Mrs. J. ஜான்சி – ஆனைமலை.
07. Mrs. லாய்ஸ் ஜான் – பணகுடி.
08. Mrs. அன்னத்தாய் ஆல்பட் – மெஞ்ஞானபுரம்.
09. Mrs. அன்னபாக்கியம் தினகரன் – மதுரை.
10. Mrs. செல்வி ஜேக்கப் – தென்காசி.
11. Mrs. ஜெயந்தி விக்டர் – ஓசூர்

## 2026 பிப்ரவரி மாதம் மீன் பிடிக்க பிரயாசப்பட்டவர்கள்

01. Mrs. ஜெயந்தி விக்டர் – ஓசூர்.
02. Sist. அலிஸ் குணசீலி – சாயர்புரம்.

Registered News Paper
R.n.i. No : Tntam / 2004 / 12805. Postal Regn. No : Tvl / 005 / 2021 - 2023
Date of Publication : 01.03.2026



# இயேசு ஜீவிக்கிறார் வெளியீடுகள்

தேவ கிருபையினால் பாடல் CD—க்களும், புத்தகமும் வெளியிடக் கர்த்தர் உதவி செய்தார். ஜீவ கீதங்கள் பாடல்களும் மற்றும் புதிய புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளது. ஜெபத்துடன் பெற்று பயனடையுங்கள்.

## பதிவுத் தபாலில் அனுப்பிட செலவு தனி

1. ஜீவ கீதங்கள் (ACD) (Vol : 1 to 24)
2. ஜீவ கீதங்கள் (VCD), MP3
3. கேட்கும் கிருபை
4. ஜீவ கீதங்கள் (220 + 35 பாடல்கள்)
5. தேவன் இப்படியும் பேசுவாரா! (Part 1-8)
6. நோவாவின் பேழை
7. வளரும் செடி
8. மனிதன்
9. வெற்றியுள்ளவன்
10. முதலாம் அற்புதம்
11. வாலிபனே நீ யார்?
12. என் இருதயத்திற்கு ஏற்றவனான தாவீது
13. ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன்
14. தேவன் தெரிந்த நாகமான்
15. ஊழியரே இது உங்களுக்காக (50 செய்திகள்)
16. டோனாவூரம்மா
17. நான் கண்ட சகேயு
18. ஜீவ விதைகள் (150 பிரசங்க குறிப்புகள்)
19. நகோமி
20. அந்த ராத்திரியிலே...

**JOHN M. JEYARAJ,**
178, Dohnavur Road, Mavadi - 627 107
Tirunelveli Dist., S. India
Phone : (04635) 210 691, Cell : 94431 13292
E-mail : yesujeevikkirar@gmail.com, Website : www.jesuslivesministries.in

Book Post

To

Owned & Published by : John M. Jeyaraj From 123-A, Dohnavur Road, Mavadi - 627107 - Tirunelveli District. Printed by Mr. S. Jairus Ponniah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai. Tirunelveli Dt. - 627 002. Editor : John M. Jeyaraj